**சீனா அபிவிருத்தி வங்கி நிதியளிக்கப்பட்ட முன்னுரிமை வீதிச் செயற்திட்டம் 3 - (கட்டம் II) - 2020**

சீனா அபிவிருத்தி வங்கி நிதியளிக்கப்பட்ட முன்னுரிமை வீதிச் செயற்திட்டம் 3 - (கட்டம் II) இன் 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு, இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியல் யாப்பின் 154(1) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், குறிக்கோள்கள் நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி

செயற்திட்டத்தின் கடன் வசதி உடன்படிக்கையின் பிரகாரம், தற்போது போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு என அழைக்கப்படுகின்ற முன்னைய உயர்கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு நிறைவேற்றும் முகவராக உள்ளதுடன் வீதி அபிவிருத்தி அதிகார சபை செயற்திட்டத்தின் அமுலாக்க முகவராக உள்ளது. முக்கிய நுழைவுகளை வழங்குகின்ற ஏற்கனவே உள்ள தேசிய வீதிகள் மற்றும் கிராமிய வீதிகளை மீள்நிர்மானித்தல் / புணரமைத்தல் மற்றும் போக்குவரத்து உட்கட்டமைப்பு தரத்ததால் அளவிடுதல் மற்றும் முன்னேற்றப்பட்ட நுழைவு கிடைக்கக் கூடிய சேவைகள் பகுதியில் வசிக்கின்ற மக்களுக்காக சமூக பொருளாதார நன்மைகளின் எண்ணிக்கையை வழங்குதல் செயற்திட்டத்தின் நோக்கமாகும். செயற்திட்டத்தின் கடன் வசதி உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்த கிரயம் ரூபா 15,594.14 மில்லியனுக்கு சமனான யூ.எஸ்.டொலர் 117.66 மில்லியனாக உள்ளதுடன் அதில் ரூபா 13,253 மில்லியனுக்கு சமனான யூ.எஸ்.டொலர் 100 மில்லியன் சீன அபிவிருத்தி கூட்டுதாபனத்தால் நிதியளிப்பதற்கு உடன்பாடு காணப்பட்டது.

## 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களிலிருந்து செம்மையாக்கல்களின் தாக்கத்தை தவிர்த்து, செயற் திட்டத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாரா நிதி நிலைமையியும் நிதிச் செயலாற்றல் மற்றும் அதனது முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் அதனுடன் இனைந்த நிதிக் கூற்றுக்கள் என்பன இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க உண்மையானதும் நேர்மையானதுமான நிலைமை ஒன்றை தருகின்றது என்பது எனது அபிப்பிராயம் ஆகும்.

## 1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கருத்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கருத்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு நலிவுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக உரிய உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| இல | கணக்கீட்டுக் குறைபாடுகள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளர் பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் இல 05 இன் பந்தி 36 இற்கு முரனாக, வெளிநாட்டு செயற்பாடுகளில் உருவான நானயமாற்று விகித வித்தியாசங்கள் செயற்திட்டத்தின் தேறிய சொத்துக்களின் கீழ் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. அதன்படி நடைமுறைவேலை 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 377.8 மில்லியனால் குறைவாக காட்டப்பட்டிருந்தது. | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் இல.05 இன் பிரகாரம் தேறிய சொத்துக்களின் கீழ் நாணயமாற்று விகித வித்தியாசங்களை பதிவு செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். | வெளிநாட்டு செயற்பாடுகள் மூலம் எழுந்த நாணயமாற்று விகித வித்தியாசங்கள் செயற்திட்டத்தின் தேறிய சொத்துக்களின் கீழ் வெளிப்படுத்தப்படல் வேண்டும். |
| (ஆ) | 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மீதமாக காணப்பட்ட ஐ.அ.டொலர் 82,814.26 பயன்படுத்தப்படாத தொகை மீதான கடன் பயன்படுத்தல்களின் மீளப்பெறல்கள் உடன்படிக்கையின் பிரிவு 3(5.5) இன் பிரகாரம் செலுத்தப்படவேண்டிய அபாய காப்பீட்டு கட்டணத்திற்காக நிதிக்கூற்றுக்களில் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கவில்லை. | செயற்திட்டமானது 2020 திசெம்பர் 31 அளவில் எதிர்பாராமல் மூடப்பட்டிருந்ததுடன் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பயன்படுத்தப்படாத கடன் மீதி ஐ.அ.டொலர் 82,814.26 ஆகவிருந்தது. செயற்திட்டமானது அபாய காப்பீட்டு கட்டணத்திற்காக எவ்வித ஏற்படுகளும் இல்லாததனால் அபாய காப்பீட்டு கட்டணத்திற்கான ஏற்பாடு நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தவில்லை. | ஏற்பாடுகள் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் இல 08 இன் பிரகாரம் செய்யப்படல் வேண்டும். |

## 3 பௌதீக செயலாற்றல்

### 3.1 செயற்திட்ட நடவடிக்கைகளின் பௌதீக முன்னேற்றம்

| | கணக்காய்வு விடயங்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | கொழும்பு – கண்டி வீதியிலுள்ள மாவனல்ல நகரத்திலான வீதி புனரமைப்பு வேலைகள் 2020 நவம்பர் 05 இல் பூர்த்திசெய்யப்பட்டிருந்தும் நிர்மானத்திற்கான இறுதி கொடுப்பனவுகளை செலுத்துவதற்கு பதிலாக ரூபா 287.35 மில்லியன் ஒப்பந்தாரரிற்கு முற்பண கொடுப்பனவாக செலுத்தப்பட்டிருந்ததுடன் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தளத்தில் காணப்பட்ட மிகுதி வேலைகளிற்காக ஓர் வங்கியிடமிருந்து உத்தரவாத பத்திரமும் பெறப்பட்டிருந்தது. மேலும் அத்தொகையானது செயற்திட்டத்தின் நடைமுறைவேலையின் கீழ் பதியப்பட்டிருந்தமையும் அவதானிக்கப்பட்டது. | 2020 திசெம்பரிற்கு பின்னர் நிதியினை நிறுத்துவதென கடன்வழங்கும் முகவரின் திடீர் தீர்மானமானது நடைபெற்றுக்கொண்டிருந்த வேலைக்கு பாதகமான விளைவினை ஏற்படுத்தி இருந்ததுடன் வேலையின் பௌதீக நிலமை அது இருந்த படி நிறுத்துவது அல்லது கைவிடுவது மிகவும் கடினமானதாகவிருந்தது. அத்தீர்மானத்தின் தகவலுடன் அப்பகுதியிலுள்ள அரசியல் அதிகார சபைகள் அதேபோல் மாவனல்ல நகரத்திலுள்ள அனைத்து அரச நிறுவனங்கள், உள்ளூராட்சி சபைகள் மற்றும் வர்த்தக சங்கங்கள் நகரத்தின் அபிவிருத்தி திட்டத்தின் வெற்றியினை பெற ஒப்படைக்கப்பட்ட பணியை பூர்த்திசெய்ய ஆர்டிஏ விற்கு பாரிய அழுத்தத்தினை செய்திருந்தது. | மிகுதி வீதிப்புனரமைப்பு வேலைகளை விரைவுபடுத்தவும் எதிர்கால ஒப்பந்தங்களில் ஒப்பந்ததாரர்களிற்கு அவ்வாறான நன்மைகளை வழங்குவதனை தவிர்க்கவும் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | கணக்காய்வு விடயங்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (ஆ) | கேகால்லை – புலத்கொகுப்பிட்டிய - கரவாநெல்ல வீதி 1.5 கி.மீ பிரிவின் வீதி புனரமைப்பு வேலைகள் ஒப்பந்தப்பெறுமதி ரூபா 240 மில்லியனுடன் 2020 ஆகஸ்ட் 06 இல் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. இருப்பினும் கையேற்புபத்திரத்தின் பிரகாரம் நிதியளிப்பு உடன்படிக்கையின் முதிர்வு காரணமாக 500மீ மாத்திரமே பூர்த்திசெய்ய முடியுமாகவிருந்தது. கூட்டுமொத்தம் ரூபா 55.9 மில்லியன் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தளத்திலுள்ள மீதி வேலைகளிற்கான ஓர் வங்கி உத்தரவாதபத்திரத்துடன் தொடர்புபட்டு செலுத்தப்பட்டு நடைமுறை வேலையின் கீழ் பதிவு செய்யப்பட்டிருந்தமை மேலும் அவதானிக்கப்பட்டது. | கடன்வழங்குனரினால் நிதியளிப்பு உடன்படிக்கை திடீரென மூடப்பட்டதன் காரணமாக செயலாற்றல் வேலைகளிற்கு ஓர் கடினமான நிலமை காணப்பட்டதுடன் அது அப்பகுதியினை சுற்றியுள்ள வீதிப்பயன்பாட்டாளர்களிற்கு பல்வேறு கஸ்டங்களை ஏற்படுத்தியிருந்தது. அதனடிப்படையில் தளத்தில் தற்போது செயன்முறையிலுள்ள கடினமான நடவடிக்கைகளை அடையாளங்கான தீர்மானிக்கப்பட்டிருந்ததுடன் பாதிக்கப்பட்ட தரப்பினர்களுக்கு ஏற்பட்ட அசௌகரியங்களை குறைக்க புலத்கொகுப்பிட்டிய பிரிவு உள்ளடங்களாக 500மீ வீதிப்பிரிவினை மேம்படுத்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. | மிகுதி வீதிப்புனரமைப்பு வேலைகளை விரைவுபடுத்தவும் எதிர்கால ஒப்பந்தங்களில் ஒப்பந்ததாரர்களிற்கு அவ்வாறான நன்மைகளை வழங்குவதில் தவிர்க்கவும் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (இ) | கூட்டுமொத்தம் ரூபா 14.4 மில்லியன் ஒப்பந்ததாரரிற்கு செய்யப்பட்டிருந்தும் பாதசாரி மேம்பால பாலங்களின் நிர்மானம் பூர்த்திசெய்யப்பட்டிராததுடன் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அரைவாசி பாலத்தின் வடிவமைப்பு நிர்மான வேலைகள் நிறுத்தப்பட்டிருந்தன. | இச்செயற்திட்டத்திற்கான தற்போது செயன்முறையிலுள்ள கடனை நிறுத்த கடன் வழங்குனர் அறிவித்திருந்த நேரத்தில் அனைத்து வடிவமைப்பு மும்மொழிவுகளும் பூர்த்திசெய்யப்பட்டு நிர்மான வேலைகளை நடைமுறைப்படுத்த ஒப்பந்ததாரரிற்கு கையளிக்கப்பட்டிருந்தது. | மிகுதி வேலைகளை பூர்த்திசெய்ய தேவையான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

### 3.2 ஒப்பந்த நிர்வாகம்

| | கணக்காய்வு விடயங்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | ஒப்பந்த குறித்த நிபந்தனையின் உபபிரவு 14.6 இன் பிரகாரம் ஒப்பந்ததாரரினால் சமர்ப்பிக்கப்படவேண்டிய இடைக்கால கொடுப்பனவு பத்திரத்தின் குறைந்தபட்ச தொகை ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒப்பந்த பெறுமதியில் 1.5 சதவீதமாகும். இருப்பினும் 2020 திசெமப்ர் 31 இல் உள்ளவாறு இடைக்கால கொடுப்பனவு பத்திரங்களை மதிப்பீடு செய்யும் போது தேவையான நிபந்தனைக்கு கீழான 19 நிகழ்வுகள் அவதானிக்கப்பட்டன. | சில சமயங்களில் ஒப்பந்ததாரரின் வேண்டுகோலின் அடிப்படையிலான கொடுப்பனவுகள் அது தேவையான நிபந்தனைக்கு கீழ் காணப்பட்டாலும் செயற்திட்ட காசுப்பாய்ச்சலினை பராமரிக்க கருத்தில் கொள்ளப்படல் வேண்டும். | கிரயம், நேரம், மற்றும் ஒப்பந்ததாரரிற்கான தேவையற்ற நன்மைகளை குறைப்பதற்கு ஒப்பந்த நிபந்தனைகளில் குறிப்பிடப்பட்ட விடயங்களை கடைப்பிடித்தல் வேண்டும். |
| (ஆ) | ஒப்பந்த பொது நிபந்தனைகளின் உபபிரிவு 14.9 இற்கு முரனாக ரூபா 41.2 மில்லியன் ஓர் வங்கி உத்தரவு பத்திரத்தின் கீழ் குறைபாட்டு நிபர்த்தி காலப்பகுதி காலாவதியாவதற்கு முன்னர் 4 நிர்மான வேலைகளுடன் தொடர்புபட்ட பிடிகாசாக செலுத்தப்பட்டிருந்தது. | 2020 திசெம்பர் முடிவில் இச்செயற்திட்டத்திற்கான கடனின் கைவிடல் காரணமாக இறுதி மீளப்பெறல் காலப்பகுதி 2020 திசெம்பர் 31 ஆக கவனத்தில் கொள்ளப்பட்டுள்ளது அதன் பிரகாரம் பொறியியலாளரின் உறுதிப்பாட்டுடன் பிடிகாசின் 2வது பகுதி ஓர் உத்தரவுபத்திரத்தனை வைத்துக் கொண்டு விடுவிக்கப்பட்டிருந்தது. | கிரயம், நேரம், மற்றும் ஒப்பந்ததாரரிற்கான தேவையற்ற நன்மைகளை குறைப்பதற்கு ஒப்பந்த நிபந்தனைகளில் குறிப்பிடப்பட்ட விடயங்களை கடைப்பிடித்தல் வேண்டும். |

**3.3 வெளிகள விஜயங்களின் போதான அவதானிப்புக்கள்.**

| | கணக்காய்வு விடயங்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | 2021 ஜுலை 19 ஆம் திகதியிலான வெளிக்கலவிஜயத்தின் போது, மேம்பால பாலங்களிற்கான மர சிற்ப வேலைகளிற்கான வடிவமைப்பு ஒப்பந்ததாரரினால் கட்டாயம் வழங்கப்பட வேண்டியமை அவதானிக்கப்பட்டதுடன் ரூபா 7.5 மில்லியன் பெறுமதியான இரும்பு விட்டங்கள் மற்றும் தூண்கள் என்பன ஓர் வினைத்திறனான வேலைக்காக பயன்படுத்தப்படாமல் உப ஒப்பந்ததாரரின் இடத்தில் குவித்து வைக்கப்பட்டிருந்தன. | அது வினைத்திறனான வேலைகளிற்காக பயன்படுத்த கவனத்தில் கொள்ளப்பட்டுள்ளது. இருப்பினும் செயற்திட்டத்தின் மிகுதி வேலைகள் ஹனன் செயற்திட்ட நிதிகளின் கீழ் மீளஆரம்பிக்க கவனத்தில்கொள்ளப்படும் என்பதனால் அக்கம்பிகள், விட்டங்கள் மற்றும் தூண்கள் என்பன அதற்காக பயன்படுத்தகூடியதாக இருக்கும். | அக்கொள்வனவு செய்யப்பட்ட மர சிற்பங்கள், கம்பி விட்டங்கள் மற்றும் தூண்களை உரிய நோக்கத்திற்கு பயன்படுத்த தேவையான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | செயற்திட்டமானது முடிவுறுத்தப்பட்டிருந்தும் பாலத்தின் நிர்மான வேலைகளை பூர்த்திசெய்ய எவ்வித மேலதிக நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை. எனவே நோக்கத்தினை அடைந்து கொள்ளாமல் ஒப்பந்ததாரர்களிற்கு கொடுப்பனவுகள் செய்வதனூடாகவும் செயற்திட்டத்தின் இறுதியில் நிர்மான மூலப்பொருட்களை வைத்திருப்பதற்கு அனுமதிப்பதனுடாகவும் தேவையற்ற நன்மையளிக்கப்பட்டிருந்தனர். | மிகுதி வேலைகள் உரிய பெறுகை அதிகார சபைகளின் அனுமதியுடன் ஹனன் செயற்திட்ட நிதிகளின் கீழ் மீள ஆரம்பிக்க கவனத்தில் கொள்ளப்படும். | அக்கொள்வனவு செய்யப்பட்ட மர சிற்பங்கள், கம்பி விட்டங்கள் மற்றும் தூண்களை உரிய நோக்கத்திற்கு பயன்படுத்த தேவையான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |